(முற்பகல் 9-40.)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு நிறைய பணத்தை 37,000 ரூபாய் ரெக்கரிங்காக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். மூலச் செலவு 8.18 இலட்சம் ரூபாய். இவ்வாறு இந்த செலவு. களை எல்லாம் செய்துகொண்டிருக்கிறோம். அதுமட்டுமல்ல இப் போது ஆரம்ப சுகாதார நிலையங்களில் கூட சித்த வைத்திய பிரிவை ஏற்படுத்தி, ஒரு டாக்டரை நியமித்து உத்திரவு போட்டு விட்டோம். பல டாக்டர்கள் சேர்ந்து விட்டார்கள். அந்த மருத்துவமனையில் தமிழ் வைத்தியம் கொடுக்கப்படும். ஆகவே எல்லோரும் ஆங்கில வைத்திய முறைகளையே கடைப்பிடிக்க வேண்டுமென்ற கொள்கை இல்லை. எல்லாப் பிரிவுகளையும் ஊக்கப்படுத்திக்கொண்டிருக்கிறோம்.

செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவ மனை.

*வினா எண். 315—திரு. மா. சுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவையாறு தொகுதி செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனை நட்டத்தில் செயல் பட்டு வருவது அரசுக்கு தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனை நிவர்த்தி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை எண். 673, சுகாதாரம், நாள் 22, ஏப்ரல் 1981-இல் அரசு செங்கிப்பட்டி மகாத்மா காந்தி நினைவு காசநோய் மருத்துவமனை செயல்பட அரசு மானியமாக அளிக்கப் பட்டு வந்த தொகை ரூபாய் 58,000—த்தை ரூபாய் 1 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

திரு. உ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவையாறு தொகுதி செங்கிப்பட்டி மகாத்மாகாந்தி நினைவு காசநோய் மருத்துவமனைக்கு தனியார்களால் நஞ்சை நிலங்கள் ஏராளமாக கொடுக்கப்பட்டு, இதற்காக நிர்வகிப்பதற்கு கலெக்டர் அவர்கள் தலைமையில் கமிட்டி ஒன்று இருக்கிறது. அப்படியிருந்தும் இந்த நிறுவனம் நட்டத்தில் நடைபெறுவதற்கு காரணம் என்ன ? எத்தனை ஏக்கர் நிலங்கள் நன்கொடையாக கொடுக்கப்பட்டிருக்கிறது ?

1982 மார்ச் 2]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த தனியார் நடத்தும் மருத்துவமனையைப் பொறுத்த வரையில் இதிலே மொத்த படுக்கைகள் 314. நாம் எதிர்பார்த்த அளவிற்கு நிரப்பப்படவில்லை. இருக்கக்கூடிய கூடிய நோயாளிகள் 160 தான் ; காலியாகவுள்ள இடம் 154. இதில் இலவச படுக்கைகள் 20 ; பணம் செலுத்துபவர்களுக்கு 140; ஸ்பெஷல் ''ஏ'' வார்டு 44 ; ஸ்பெஷல் 'பி'. வார்டு 5 ; தனியார் துறையாக இருக்கிற காரணத்தாலே பணத்தைக் கொடுத்துதான் அங்கே போக வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது. காசநோயைப் பொறுத்த வரையில் அரசாங்கமே முழுப் பொறுப்பை எடுத்துக்கொண்டு இலவசமாக நடத்துவதாக இருந்தால் அது நிரப்பப்படும். தனியாக ஒருவர் நடத்த வேண்டுமென்றால் நிச்சயமாக நஷ்டம் தான் ஏற்படும். ஏனெனில் அங்கே போகக்கூடிய நோயாளிகள் எல்லோரும் வசதி படைத்தவர்கள் அல்ல. பணம் கொடுக்காமல் இலவசமாக மருத்துவ வசதிகளை அளிக்கக்கூடிய மருத்துவ மனைகளைத்தான் அவர்கள் விரும்புகிறார்கள். ஆகவே தான் இந்த நிறுவனம் நட்டத்திலே நடைபெறுகிறது.

திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த மருத்துவ மனைக்கு ஏன் நோயாளிகள் வருவதில்லை என்பது குறித்து சிறப்பான முறையில் பதில் அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். கொடுக்கப்படுகிற மானியம் குறைவாக இருப்பதால் வருகிற, நோயாளிகளுக்கு மருந்துகள் கொடுப்பதற்கு கூட முடியாமல் இருக்கிறது. முக்கியமாக நோயாளிகளுக்கு சத்துணவு கொடுக்க வேண்டும். அவற்றை சரிவர கொடுப்பதில்லையென்பதால் நோயாளிகள் வருவதில்லை என்பதாக அறிகிறேன். எனவே, கொடுக்கப்படும் மானியத்தை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது முழுக்க முழுக்க உண்மைதான். இந்த மானியத்தைக்கூட கஷ்டப்பட்டுத்தான் உயர்த்தியிருக்கிறோம். காச நோயைப் பொறுத்த வரையில் இலவசமாக வைத்தியம் செய்வதுதான் முறையாக இருக்கும். ஆனால் '' பிரைவேட் என்டர்பிரைசிங்காக '' ஆரம்பித்து இருக்கிறார்கள். படிப்படியாக மானியத்தை இன்னும் கொஞ்சம் உயர்த்தி நிலையை உயர்த்த வேண்டுமென்று நமக்கும் ஆசை இருக்கிறது. நிதிநிலையைப் பொறுத்து இது நிச்சயமாக ஆராயப்படும். நான் கூட அங்கு சென்று பார்த்திருக்கிறேன். அப்போது அங்கேயிருக்கிற பிரச்சினைகளையெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். அங்கேயிருக்கும் நோயாளிகள் இலவசமாகத் தங்களுக்கு வைத்தியம் செய்தால் வசதியாக இருக்குமென்றுச் சொன்னார்கள். இப்போது முன்பு வழங்கியதைவிட சத்துணவு ஜாஸ்தியாக கொடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.